மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இந்து சமய-அறக்கட்டளைகள் (நிர்வாக) நிதியின் இருப்பு, துறையின் உபரி நிதியாகக் கருதப்படுவதற்கில்லை. இது துறையின் நடப்புக் கணக்காகக் கருதப்பட வேண்டும்.

31—3—1971 அன்றுள்ளபடி நிதி இருப்பு ரூ. 59,68,560 94 ஆகும்.

*Thayumanavar Temple, Tiruchirappalli*

* 214. *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any representation has been made to open a maternity hospital on behalf of Sri Thayumanavar Temple, Tiruchirappalli ; and

(*b*) if, so, the action taken thereon by the Government ?

திருச்சி தாயுமானவர் கோயில்

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி தாயுமானவர் கோயிலின் சார்பில் மகப்பேறு மருத்துவ மனை திறக்கக் கோரிக்கை வந்ததா ?

(இ) ஆம் எனில், அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

*Idols.*

* 215 *Q.*—THIRU S. VELLAPANDIAN (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether a large number of idols was recovered at Chinnathambur near Nagapattinam in Thanjavur district about 6th March 1972; and

(*b*) if so, the details thereof ?

கடவுளர் சிலைகள்

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் (திரு வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்):** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

*(அ) 1972 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாளளவில் தஞ்சாவூர் மாவட்டம், நாகப்பட்டினத்திற்கருகிலுள்ள சின்ன தும்பூரில் ஏராளமான கடவுளர் சிலைகள் மீட்கப்பட்டனவா ?*

*(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை ?*

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** (அ) ஒரு சிலை மட்டும்.

(இ) ஸ்ரீநடராஜர் சிலை.

| எடை. | | உயரம். | |
|---|---|---|---|
| கி. கி. | கிராம். | அடி. | அங். |
| 47 | 500 | 2 | 9½ |

**திரு. ஜி. சுவாமிநாதன் :** அதனுடைய விலை அல்லது மதிப்பு எவ்வளவாக இருக்குமென்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவர் அவர்களே, அதனுடைய எடை 47½ கிலோ கிராம் என்று குறிப்பிட்டிருக்கிருர்கள். மதிப்பு எவ்வளவு என்ற விவரம் என்னிடத்தில் இல்லை.

*Pending cases in the office of the Assistant Commissioner of the Hindu Religious and Charitable Endowments in Madras.*

* 216. *Q.*—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state the total number of cases filed during (1) 1968, (2) 1969, (3) 1970, (4) 1971, and (5) 1972 now pending in the office of the Assistant Commissioner of Hindu Religious and Charitable Endowments in Madras ?

சென்னை இந்து சமய-அறக்கட்டளைத் துறை உதவி ஆணையர் அலுவலகத்தில் உள்ள முடிவுரு வழக்குகள்

**திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் :** மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

*1968, 1969, 1970, 1971, 1972 ஆம் ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட மொத்தம் எத்தனை வழக்குகள், சென்னை, இந்து சமய-அறக்கட்டளைத் துறை உதவி ஆணையாளர் அலுவலகத்தில் தற்போது முடிவுரு நிலையில் உள்ளது ?*